

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மே 23, 2019 | புரட்சி 18 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00


# ஈழத் தமிழர் பிரச்சினை: இலங்கை – இந்திய அரசுகளின் துரோகம்

*முள்ளி வாய்க்கால் இனப் படுகொலை நடந்து 10 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஐ.நா.வின் தலையீட்டுக்குப் பிறகும் இலங்கை அரசு தமிழர் உரிமைக்கான எந்த முன்னெடுப்பையும் செய்ய வில்லை. இப்போது என்ன நடக்கிறது என்பதை விளக்கி ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கை:*

இந்திய வான்படை வீரர் அபிநந்தன் வர்த்தமான் பாகிஸ்தானிடம் மாட்டிக் கொண்டு அவரது புகைப்படமும் காணொளியும் வெளிவந்தபோது ஜெனீவா உடன்படிக்கையின்படி போர் கைதிகளின் புகைப்படத்தை வெளியிடக் கூடாதென்று இந்தியா தெரிவித்தது. மேலும் ஐ.நா. மனித உரிமை அமைப்பில் இதுபற்றி முறையிடப் போவதாகவும் சொன்னது. அதே சர்வதேச சட்டவிதிகள் மீறப் பட்டே ஈழத்து இசைப்பிரியாக்களும் பாலசந்திரன் களும் அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்களும் சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர். தன்னாட்டு வீரர்கள் பொருட்டு ஜெனீவா மன்றத்தில் முறையிடப் போவதாக சொல்லும் இந்திய அரசு, ஈழத் தமிழர் களின் பொருட்டோ குற்றமிழைத்த இலங்கையை ஆதரித்து நிற்கிறது. அபிநந்தன் வர்த்தமான்களுக்கு ஒரு நீதி? பாலசந்திரன்களுக்கு ஒரு நீதியா?

ஐநா.மனித உரிமை அமைப்பின் கூட்டத்தொடர் பிப்ரவரி 25 இல் தொடங்கியது. மார்ச் 25 வரை நடக்க இருந்தது. மார்ச் 20 அன்று இலங்கை மீதான விவாதம் நடக்க இருந்தது. 2015 அக்டோபரில் அமெரிக்கா வுடனும் பிற நாடுகளுடனும் சேர்ந்து சிறிலங்கா கூட்டாக முன்மொழிந்த தீர்மானம் (30/1) மனித உரிமை அமைப்பில் ஒருமனதாக நிறை வேறியது. அத்தீர்மானம் காமன்வெல்த் உள்ளிட்ட பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடன் கூடிய சிறப்புத் தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தியது. பின்னர், 2017 மார்ச் மாதம் 34/1 தீர்மானத்தில் சிறிலங்காவிற்கு இரண்டு ஆண்டு கால அவகாசம் கொடுக்கப்பட்டு அதுவும் நிறைவடைந்துவிட்டது.

2019 பிப்ரவரி 18ஆம் நாள் பிரதமர் இரணில் விக்கிரமசிங்கே பின்வருமாறு பேசினார்: “மனிதவுரிமை தொடர்பான குற்றம் புரிந்தவர் களுக்குப் பொது மன்னிப்பு வழங்க வழிவகை செய்யும்படியான உண்மை மற்றும் மீளிணக்க ஆணையம் அமைக்க சிறிலங்கா பணியாற்றி வருவதாகவும், தமிழர்கள் கடந்த காலத்தை மறந்துவிட வேண்டும்” என்றும் கூறினார்.

மார்ச் 6 அன்று அதிபர் சிறிசேனா, “பழைய புண்களைத் நோண்ட தாம் விரும்பவில்லை” என்று சொல்லி இத்தீர்மானத்தை ஒரே அடியாக ஊற்றி மூடும் நோக்கில் காலநீட்டிப்பைக்கூட எதிர்த்துப் பேசியுள்ளார்.

வெளியுறவு அமைச்சகம் கால நீட்புக்கான தீர்மானத்தை தாம் முன்மொழியப் போவதாகவும் கடந்த காலத்தில் அப்படி முன்மொழிந்ததன் பயனாகத்தான் வெளிநாடுகளில் அமைதி காப்புப் பணிகளில் சிறிலங்கா படையினர் ஈடுபட முடிந்தது என்று படை வீரர்களின் பாதுகாப்பைத் தாமே உறுதி படுத்தியுள்ளோம் என்று சொல்கிறது. மொத்தத்தில் தமிழர்களுக்கு எதிரானப் போர்க்குற்றங்கள், மானுட விரோதக் குற்றங்களுக்கானப் பொறுப்புகூறலில் இருந்து படைவீரர்களைப் பாதுகாப்பதில் யார் சிறந்தவர்கள் என்பதுதான் சிங்களப் பேரினவாத ஆற்றல்களான இராசபக்சே முகாமுக்கும் இரணில் முகாமுக்கும் இடையே நடந்துவரும் போட்டியாக இருக்கிறது

போர்க் குற்றங்களுக்காகவோ அன்றி மானுட விரோதக் குற்றங்களுக்காகவோ படைவீரர்களில் ஒருவர்கூட புலனாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. மாறாக பொறுப்பேற்க வேண்டியவர்கள் எல்லாம் பதவி, பட்டங்கள் (சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் சவேந்திர செல்வா) பரிசளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளனர். தமிழ்ப் பகுதிகளில் இருந்து சிங்களப் படை விலக்கிக் கொள்ளப்பட வில்லை. ஆறு தமிழர்களுக்கு ஒரு சிங்களப் படை வீரர் என்ற தகவைப் பேணி வருகின்றது சிறிலங்கா அரசு. கண் துடைப்புக்காக காணாமற்போனோர் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளது சிறிலங்கா அரசு. செம்மணிப் புதைக்குழி போல் மன்னாரிலும் ஒரு கூட்டப் புதைக்குழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப்படி கண்டுபிடிக்கப்படும் புதைக்குழிகளுக்கு எவரும் பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை. எலும்புக்கூடுகள் கூட உரிய வகையில் பாதுகாக்கப்படவும் இல்லை. உண்மை மற்றும் நீதித் திட்டக் குழுவினர் (ITJP) அளித்த அறிக்கை தமிழ்ப் பெண்களைக் கொண்டு சிறிலங்காப் படை நடத்திய “வல்லுறவு முகாம்கள்” பற்றிய தரவுகளை 2017 பிப்ரவரி வெளியிட்டது. நாட்கணக்கில், மாதக்கணக்கில் தமிழ் மக்கள் நடத்தியப் போராட்டங்களின் அழுத்தத்தால் சிலவிடங்களில் பறிக்கப்பட்ட நிலங்கள் திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் உருண்டோடிவிட்டது. பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதில் ஓரங்குலம்கூட முன்னேறாத நிலையில் மீண்டுமொரு ஈராண்டு கால அவகாசம் என்பது எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரப் போவதில்லை. இங்கு சிக்கல் காலம் போதவில்லை என்பதல்ல, நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசிடம் அரசியல் மனத்திட்பம் இல்லை என்பதே. எனவே, இலங்கைக்கு கால நீட்டிப்பு தருவதென்பது 2009 க்குப் பின்பு இலங்கை செய்துவரும் கட்டமைப்பு ரீதியான தமிழின அழிப்புக்குத் துணை செய்வதே,

**இந்திய அரசின் தொடர் துரோகம்**

- *2009 க்கு முன்பு இன அழிப்புப் போருக்கு துணைநின்றது இந்திய அரசு. விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்று இலங்கைக்கு அடுத்தபடியாக விரும்பிய முதல் அரசு இந்திய அரசே*
- *2009 இல் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிக்க வேண்டும் என்று கோரிய சுவிட்சர்லாந்து முன்மொழிவை முடக்கியதில் முதன்மைப் பங்கு வகித்தது இந்தியா. இலங்கையைப் பாராட்டி கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து அகமகிழ்ந்தது.*
- *2012 இல் கற்றப் பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று ஐநா.மனித உரிமை அமைப்பில் வேண்டுகோள்விடப்பட்ட போது இலங்கை அரசின் அனுமதியுடன் மட்டுமே ஐநா. அதிகாரிகள் ஆலோசனை வழங்க வேண்டுமென அதில் இலங்கைக்கு ஆதரவாக மாற்றம் கொண்டு வந்தது இந்தியா.*
- *2013 இல் பன்னாட்டு மனித உரிமை சட்ட மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசே தற்சார்புள்ள நம்பகமான புலனாய்வை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது ஐநா. அதிகாரிகள் இலங்கைக்கு செல்ல கட்டுப்பாடற்ற அனுமதி, இலங்கை அரசின் மீதான அதிருப்தி வாசகங்கள் உள்ளிட்டவைகளை தீர்மானத்தில் இருந்து நீக்க வைத்தது இந்தியா. மேலும் ஐநா. மனித உரிமை அமைப்பு செப்டம்பர் 2013 இல் இலங்கை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதை மார்ச் 2014 என மாற்றியது இந்தியா.*
- *2014 இல் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் மீது ஐநா. மனித உரிமை மன்ற ஆணைய அலுவலகத் தலைமையில் ஒரு விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அதை மாற்றி உள்நாட்டு விசாரணை என திருத்தம் கொண்டுவர முனைந்தது இந்தியா. இறுதியில் பன்னாட்டுப் புலனாய்வு கோரிய தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளவில்லை.*
- *2015 அக்டோபரில் 30/1 தீர்மானத்தையும் 2017 மார்ச் 34/1 தீர்மானத்தையும் இந்தியா ஆதரித்து வாக்களித்தது.*

*2013 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மாணவர் போராட்டத்தின் எழுச்சியின் பயனாய் பன்னாட்டுப் புலனாய்வுக் கோரியும் அரசியல் தீர்வுக்கு ஈழத் தமிழர்*

4ஆம் பக்கம்

## தேர்தல் ஆணையத்தின் முகத்திரை கிழிகிறது!

*உலகின் மிகப் பெரிய ‘ஜனநாயக நாடு’ என்று கூறப்படும் இந்தியாவில் பொதுத் தேர்தலை நடத்தும் அதிகாரம் படைத்த ‘தேர்தல் ஆணையம்’ அதன் நம்பகத் தன்மையை இழந்து நிற்கிறது.*

*இதுவரை நடந்த எந்த பொதுத் தேர்தலிலும் தேர்தல் ஆணையம் இப்படி ஒரு சார்பாக நடந்து கொண்டதே இல்லை. ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றாகவே மாறிப்போய் செயல்பட்டார் தேர்தல் ஆணையத் தலைவர் சுனில் அரோரா.*

*இராணுவத்தின் தாக்குதலை ஆட்சியின் சாதனையாகப் பேசக் கூடாது என்று தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவை பகிரங்கமாக மீறினார் மோடி. நாட்டின் சட்டத்தை மதித்து நடக்க வேண்டிய பிரதமரே இப்படி தரம் தாழ்ந்து செயல்பட்டார்.*

*தேர்தல் ஆணையத்தின் ஒரு சார்பு நிலையை மூன்று பேர் கொண்ட ஆணையத்தின் உறுப்பினர்களில் ஒருவராக இருந்த அசோக் லாவசா ஏற்கவில்லை.*

*தேர்தல் ஆணையம் விதித்த கட்டுப்பாடுகளை மீறிய மோடியின் பேச்சு, விதி மீறல்களுக்குள் வராது என்று தலைமை தேர்தல் அதிகாரி நற்சான்றிதழ் வழங்கினார். மற்றொரு உறுப்பினரான அசோக் லாவசா இது விதிமுறைகளை மீறியப் பேச்சு என்று குறிப்பு எழுதினார். எதிர்ப்பைப் பதிவு செய்யத் தயாராக இல்லை தலைமை தேர்தல் அதிகாரி. தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் கூட்டத்தைப் புறக்கணித்தார் அசோக் லாவசா. ஊடகங்களில் செய்திகள் வந்தன. கருத்து மாறுபாடுகள் இருப்பது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டார், தலைமை தேர்தல் அதிகாரி சுனில் அரோரா.*

*லாவசா தனது எதிர்ப்பை மூன்று முறை எழுத்து மூலம் பதிவு செய்திருக்கிறார். பிரச்சினை நாடாளுமன்றத் தேர்தலுக்கான நடத்தை விதிமுறைகள் பற்றியது என்றாலும், தேர்தல் முடிந்த பிறகு இது குறித்துப் பேசலாம் என்று கூறி விட்டார் தலைமை தேர்தல் அதிகாரி. நம்பகத் தன்மையை இழந்து நிற்கும் தேர்தல் ஆணையம் மீண்டும் மோடியை பிரதமராக்க எடுத்த அனைத்து முறைகேடுகளுக்கும் பலன் கிடைக்குமா இல்லையா என்பது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தெரியும்.*

*ஆனால் தேர்தல் ஆணையம் இந்தத் தேர்தலில் ‘டெபாசிட்’டையே இழந்து நிற்கிறது!*

# அய்.நா. மனித உரிமை ஆணையத்திடம் தொடர்பைத் துண்டித்த நடுவண் பா.ஜ.க. ஆட்சி

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இந்திய இராணுவம் நடத்தி வரும் மனித உரிமை மீறல்களை அறிக்கையாக மனித உரிமைக் கவுன்சில் அய்.நா.விடம் சமர்ப்பித்துள்ளதால் ஆத்திரமடைந்த நடுவண் ஆட்சி, இனி அய்.நா.வின் மனித உரிமை ஆணையத்துடன் இந்தியாவுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிவித்திருக்கிறது.

அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை வெளி வந்த அதே நாளில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இரண்டு அரசு சாராத அமைப்புகள், இந்திய இராணுவம் பொது மக்கள் மீது நடத்திய சித்திரவதை படுகொலைகளை விளக்கும் அறிக்கையையும் வெளியிட்டது. 4 குழந்தைகளை இராணுவம் சுட்டுக் கொன்ற கொடூர சம்பவமும் இதில் இடம் பெற்றுள்ளது. இந்த அரசு சாரா அமைப்பின் அறிக்கையை அய்.நா. மனித உரிமைக் கவுன்சிலும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலிருந்து மனித உரிமை மீறல் தொடர்பாக இந்த அறிக்கை வெளி வந்த அதே நாளில் அய்.நா. மனித உரிமை ஆணையமும் அறிக்கை வெளியிட்டது. இது நடுவண் ஆட்சிக்கு கடும் ஆத்திரத்தை உருவாக்கியுள்ளது. அய்.நா. மனித உரிமை ஆணையர் 2018ஆம் ஆண்டில் மனித உரிமை மீறல்கள் குறித்து இந்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று, 2019 மார்ச்சில் கடிதம் எழுதிக் கேட்டார்.

அத்துடன் 2018ஆம் ஆண்டில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களில் மிக மோசமான கவலைக்குரிய 13 சம்பவங்களை அவர் பட்டியலிட்டிருந்தார். பாதுகாப்புப் படை சுட்டுக் கொன்ற எட்டு அப்பாவிப் பொது மக்களில் 4 குழந்தைகளும் கொல்லப்பட்ட சம்பவமும் இதில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது. அத்தனையும் உண்மைக்கு மாறானவை என்று ஒரே வரியில் அய்.நா.வுக்கான இந்திய நிரந்தர பிரதிநிதி மறுத்ததோடு மனித உரிமைக் கவுன்சிலோடு இனி இந்தியா எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்ளாது என்று அறிவித்து விட்டார். மனித உரிமை ஆணையாளர் சையத் ரா அல் உசேன் இந்தியாவிடம் பாகுபாடு காட்டுவதாகவும் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் அய்.நா. சிறப்பு அதிகாரிகள், இந்தியா ஏற்கனவே ஒப்புக் கொண்டு கையெழுத்திட்ட உடன்பாடுகளை மீறி வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். உடன்பாட்டில் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் சிறப்பு அதிகாரிகள் - இந்தியாவுக்குள் நேரில் ஆய்வு நடத்த அனுமதிக்க வேண்டும் என்பதும் அடங்கும். அதற்கு 20 முறை அனுமதி கேட்டும் இந்தியா மறுத்துள்ளது. இராணுவத்தால் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டவர்களில் 70 சதவீதம் பேர் பொது மக்கள், இராணுவத்தினர் அல்ல என்று அய்.நா. மனித உரிமை ஆணைய அறிக்கை கூறுகிறது.

# பொன்பரப்பி தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




பொன்பரப்பியில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது நடத்தப்பட்ட சாதிவெறித் தாக்குதலைக் கண்டித்தும், பொன்பரப்பியில் தடுக்கப்பட்ட வாக்குப்பதிவினை மீண்டும் நடத்த வலியுறுத்தியும், இந்து முன்னணி மற்றும் பா.ம.க.வைச் சேர்ந்த சாதிய வன்முறையாளர்களை கைது செய்ய வலியுறுத்தியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்ட ஈட்டினை வழங்க வலியுறுத்தியும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 23.4.2019 அன்று சென்னையில் நடத்தப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் அன்பு தனசேகரன், தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன், மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன், தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவன், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சென்னை மாவட்ட தலைவர் குமரன் மற்றும் பரந்தாமன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் உலகநாதன், டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் தீபக், அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தெய்வமணி, தமிழர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் கண்டன உரை யாற்றினர்.

# ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் வரலாற்று ஆவணம்

**நூல் மதிப்புரை**




வடவாரிய பார்ப்பன வந்தேறிகளின் சூழ்ச்சியால் திராவிட இன மக்களாகிய மண்ணின் மைந்தர்களுக்கு இடையே நால்வருண சாதி அடுக்குகளை உருவாக்கி, தீண்டாமையை நிலைப்படுத்தி விட்டனர். இந்த மனிதகுல விரோதக் கட்டமைப்பைச் சீர்குலைத்து விடாது மேலும் கெட்டிப்படுத்தும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாதுகாப்பு வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுவிட்டது சூது மதியினரால்!

பிறப்பின் காரணமாக மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வையும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதத்தையும் கற்பித்துக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை எதிர்த்து மானுடப் பற்றாளரான பெரியார், சாதி-தீண்டாமை ஒழிப்புக்கான பிரச்சாரம் - போராட்டம் என நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்த வருண பேதம் கற்பிக்கும் சாஸ்திர-சம்பிரதாயங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தீ வைத்துக் கொளுத்துவேன் என்று போராட்ட அழைப்பை விடுத்து, இன இழிவு நீங்கிட, தீண்டாமை ஒழிந்திடப் போராட்டக் களம் நோக்கி வாருங்கள் என மக்களுக்கு அழைப்பு விடுத்தார் பெரியார்!

பெரியாரின் போர்க் குரல் கேட்டு, சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள நாடெங்குமிருந்து, பல ஆயிரக்கணக்கான போராளிகள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளைச் சுமந்த கர்ப்பிணிகளும், கைக் குழந்தைகளுடன் தாய்மார்களுமாகத் திரண்டு 1957, நவம்பர் 26இல், இந்திய அரசியல் சட்டத்தின் சாதியைப் பாதுகாப்பளிக்கும் பிரிவினைக் கொளுத்தி சிறை புகுந்தனர்.

போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டும்கூட, அதனைப் பொருட் படுத்தாது மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பெரியார் தொண்டர்கள் சிறை புகுந்தனர்.

இந்தியத் துணைக் கண்டத்தையே அதிர வைத்த இந்தச் சட்ட எரிப்புப் போராட்டத்தின் வரலாற்றை, தந்தை பெரியார் திராவிடர் கழகம் 2547 பக்கங்களில் 3 தொகுதிகளாகத் தொகுத்து வெளியிட்டுள்ளது.

முதல் தொகுதியில் பெரியார் பங்கேற்று வெற்றி பெறச் செய்த வைக்கம் போராட்டம் முதல், கர்ப்பக்கிருக நுழைவுப் போராட்டம் வரை பட்டியலிட்டுள்ளது. 'போராட்ட இலக்கை நிர்ணயித்த பெரியார்' எனத் தொடங்கும் அத்தியாயம் முதல், 13ஆம் அத்தியாயம் வரை போராட்டம் நடைபெற்ற தமிழ் நாட்டின் 11 மாவட்டங்கள், புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா என பிற மாநிலங்கள் உள்பட 556 இடங்களில் எங்கெங்கு அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது என ஆவணப்படுத்தியுள்ளது.

இரண்டாவது தொகுதியில் சட்ட எரிப்புப் போராட்டம் பற்றி பத்திரிகைகளும், பார்ப்பனர்களும், பிற கட்சித் தலைவர்களும் வெளியிட்டிருந்த கருத்துகளும், போராட்டத்தை அடுத்து, திருச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பெரியார், பார்ப்பனர்கள் மீது வன்முறையைத் தூண்டும் விதமாகப் பேசியதாக 'குத்துவெட்டு' வழக்கில் கைது செய்யப்பட்டு, விடுதலை ஆனது வரையிலான செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து தி.மு.கழகத்தை அறிஞர் அண்ணா உருவாக்கியிருந்தபோதும், சட்டமன்றத்தில் பெரியாரின் போராட்டத்தைச் சட்டவிரோதம் என அறிவிக்கும் மசோதா தாக்கல் செய்யப்பட்டபோது, அதனை எதிர்த்துக் கடுமையாக அண்ணா வாதிட்ட சிறப்பான உரையும் காணப்படுகிறது.

மூன்றாவது தொகுதியில் சட்ட எரிப்புப் போர் வீரர்களான பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகியோர் திருச்சி சிறைக்குள்ளேயே வீரமரணம் அடைந்ததும், அவர்களது உடலைப் பெற்று அடக்கம் செய்திட அன்னை மணியம்மையார், நடிகவேள் எம்.ஆர். இராதா உள்ளிட்ட தோழர்கள் மேற்கொண்ட முயற்சிகள், களப்பலியான மாவீரர்கள் பற்றிய செய்திகள் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

மொத்தத்தில், சட்ட எரிப்புப் போரின் முழுமையான ஆவணத் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது.

பெரியார் இயக்கப் போராட்டங்கள் ஆவணப்படுததப்படவில்லையே என்ற குறையைப் போக்கி வெளிவந்துள்ளது. பாதுகாக்கப்படவேண்டிய அரிய ஆவணம்.

**- ஒ. சுந்தரம்**

**வெளியீடு: தந்தை பெரியார் திராவிடர் கழகம்**
**நூல் தொடர்புக்கு : 9443822256/9442128792**
**3 தொகுதிகளுக்கும் சேர்த்து விலை : ரூ.2500**

# "யாகம் வளர்த்தால் மழைபெய்யுமா?"

சார்லஸ் டார்வின் தன்னுடைய முதுமையில் ஒரு நாயை வளர்த்தார். அது எப்போதுமே டார்வினுடனேயே இருக்குமாம். டார்வின் படித்துக் கொண்டிருக்கும்போது அவர் அறையின் கர்ட்டன் (திரை) காற்றில் அசைந்ததாம். நாய் குடுகுடுவென்று ஓடிப்போய், யாரது, கர்ட்டனை அசைக்கிறது?!" என்று ஆராய போயிற்றாம்.

டார்வின் நினைத்தார், "நாய்களுக்குத் தெரியாது, கர்ட்டன் காற்றில் இயல்பாகவே அசையும்" என்று. அதன் அறிவிற்கு எட்டியதெல்லாம் "ஏதாவது நிகழ்ந்தால், நிகழ்த்துபவர் யாரோ ஒருவர் எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறார்" என்பது மட்டுமே. யாருமே இல்லாமல், இயற்கையின் சக்திகளால் மட்டுமே பலதும் நடக்கும் என்று புரிந்து கொள்ளும் நுணுக்கமான அறிவு நாய்களுக்கு வாய்க்கவில்லை.

சிலர் டார்வின் மாதிரி யோசிப்பார்கள், வேறு சிலரோ...

**மருத்துவர் சாலினி டுவிட்டரில் பதிவு**

## அடுக்கடுக்கான வரலாற்றுச் சான்றுகள்

# கோட்சே ‘இந்து’ பயங்கரவாதிதான்!

***கோட்சே என்ற தனிமனிதனின் வெறிச் செயல் தான் காந்தி கொலை என்றும், அதை பா.ஜ.க.வோ சங்பரிவாரங்களோ ஏற்கவில்லை என்றும் பா.ஜ.க.வினர் வாதாடுகிறார்கள். கோட்சே பயங்கரவாதிதான்; ஆனால் இந்து பயங்கரவாதி என்று கூறுவது இந்து மதத்துக்கு விரோதம் என்றும் கூறுகிறார்கள். மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்காசன் வெளியிட்ட கருத்துக்கு எதிராக எழுந்த எதிர்வினைகள் இவை. கோட்சே தனி மனிதரா? ஆர்.எஸ்.எஸ். ‘இந்து’ தர்மம் – இந்துத்துவம் என்ற வலைப் பின்னலி லிருந்து கோட்சேயை தனித்துப் பிரித்தெடுக்க முடியுமா?***

***காந்தி கொலையில் பல வரலாறுகள் திரிக்கப்பட்டு உண்மைகளை மறைத்து, சங்பரிவாரங்களும் இந்துத்துவா சக்திகளும் திட்டமிட்டு பரப்புரை செய்து வருகின்றன. அது குறித்த வரலாற்று உண்மைகளை ஓரளவு இந்தக் கட்டுரையில் விளக்குகிறது.***

1948 ஜனவரி 30, பார்ப்பன கொலைவெறிக்கு காந்தியார் பலியான நாள் அதுதான்!

புதுடில்லியில் உள்ள பிர்லா மாளிகையில் - தனது அறையிலிருந்து காந்தி புறப்பட்டார்; அதுவரை சர்தார் வல்லபாய் பட்டேலுடன் பேசிக் கொண்டிருந்தவர் - பிரார்த்தனைக்கு நேரமாகிவிட்டது என்று பட்டேலிடம் விடைபெற்றுக் கிளம்பி, பிரார்த்தனை மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். காந்தியாரின் பேத்தி ஆவா காந்தி, மருமகள் மனு காந்தி ஆகியோர் தோள் கொடுக்க - தோட்டத்தைக் கடந்து பிரார்த்தனை மேடைக்கு வந்தார்; மண்டபத்தை அடைய இன்னும் 4 அடிகளே எடுத்து வைக்க வேண்டும். 500 பேருக்கு மேல் கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது; அப்போது கூட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு 35 வயதுடைய இளைஞன் ஒருவன் வந்தான்.

தனது உடலை வளைத்து குனிந்து ‘பிரணாம்’ (சல்யூட்) செய்தான். காந்தியார் திரும்பி மரியாதை செலுத்தினார். ‘இன்று பிரார்த்தனைக்கு நேரம் ஆகி விட்டது அல்லவா?’ என்று கேட்டான். காந்தியார் சிரித்துக் கொண்டே, ‘ஆம்; நேரமாகி விட்டது’ என்றார். உடனே, ரிவால்வரை எடுத்தான். காந்தியாரை நோக்கி மூன்று முறை சுட்டான். காந்தியார் வயிற்றுக்குக் கீழேயும், இதயத்துக்கு கீழேயும் குண்டு துளைத்துச் சென்றது. காந்தியார் நிலை குலைந்து போனார். ஆவா காந்தியும், மனு காந்தியும் அழுத்திப் பிடித்துக் கொண்டனர். அப்போது நேரம் மாலை 5 மணி 12 நிமிடம்! காந்தியார் மூச்சை இழந்தார். அதற்கு முன் ஜனவரி 15 ஆம் தேதியிலிருந்து வகுப்புக் கலவரங்களை எதிர்த்து தொடர்ந்து ‘உண்ணா விரதம்’ இருந்த காந்தியார் சில நாள்களுக்கு முன்புதான் உண்ணாவிரதத்தை முடித்திருந்தார்.

காந்தியாரை சுட்டுக் கொன்றவனை - கூடியிருந்தவர்கள் வளைத்துப் பிடித்தனர். ஆத்திரமடைந்த கூட்டத்தினர் அவனை அடித்துக் காயப் படுத்தினர். போலீசார் அவனைக் கைது செய்து சிறைக்குக் கொண்டு போனார்கள்.

அந்த இளைஞன்தான் நாதுராம் கோட்சே! மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த சித்பவன் பார்ப்பனர்.

இச்செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்த நேரு, வானொலியில் பேசுகிறார்:

> “ஒரு பைத்தியக்காரன், காந்திஜியின் வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டான்; நான் அவனை பைத்தியக்காரன் என்றுதான் சொல்லுவேன். கடந்த பல ஆண்டுகளாகவே இந்த நாட்டில் ஒரு விஷம் பரப்பப்பட்டு வருகிறது. அந்த விஷம் மக்களிடையே பயங்கர விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த விஷத்தை நாம் சந்திப்போம்; சந்தித்தே தீருவோம்”

என்று நேரு, காந்தியாரின் உயிரை மாய்த்த அந்த ‘விஷ’த்தை சுட்டிக்காட்டி அறைகூவல் விடுத்தார்.

காந்தியார் மறைவு பற்றிய வரலாறு ஆர்.எஸ்.எஸ். இல்லாமல் முழுமை பெற முடியாது! காந்தியார் உயிரைக் குடித்த ‘சித்பவன்’ பார்ப்பனர் - ஒரு ஆர்.எஸ்.எஸ். காரரே என்பது கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் உண்மை! ஆனால், கோட்சேவுக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது என்று இமயமலையை தூணில் மறைக்கும் முயற்சிகளில் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் ஈடுபட்டது; அதையே இப்போதும் செய்து கொண்டிருக்கிறது.

**“காந்தியாரை இன்று மாலை 5.20 மணிக்கு ஒரு இந்து சுட்டுக் கொன்றான்” என்று, சுட்டவன் இந்து என்பதை வலியுறுத்தி வானொலியில் செய்தி அறிவிக்கப்பட்டது.**

காந்தியார் இறந்தார் என்ற செய்தி வந்தவுடன், அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தை உருவாக்க முயன்ற கூட்டம் இது. காந்தியாரை சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லிம் என்ற வதந்தியை திட்டமிட்டுக் கிளப்பினார்கள். ஒரு சில நிமிடங்களிலே இந்த வதந்தி காட்டுத் தீ போல பரவிவிட்டது. பல இடங்களில் முஸ்லிம்கள் மீது தாக்குதலும் தொடங்கிவிட்டது.

காந்தியார் இறந்துவிட்டார் என்ற செய்தி அறிந்து மவுண்ட்பாட்டன் (அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த பிரிட்டிஷ் பிரதிநிதி), பிர்லா மாளிகைக்கு விரைகிறார். அப்போது, வெளியே பெரிய கூட்டம் திரண்டு நிற்கிறது. கூட்டத்தை விலக்கித் தள்ளிக் கொண்டு மவுண்ட்பாட்டன் அவசரமாக நுழையும் போது ஒருவன் ஓடிவந்து “ஒரு முஸ்லிம் காந்தியைக் கொன்று விட்டான்” என்று அலறுகிறான். “முட்டாள், வாயை மூடு; கொன்றது ஒரு இந்துதான் என்று உனக்குத் தெரியாதா?” என்று ஆத்திரத்தோடு பதிலளித்தார் மவுண்ட்பாட்டன். (ஆதாரம் : ‘Freedom at Midnight’ நூல்)

அகில இந்திய வானொலியின் டைரக்டருக்கும், காந்தியாரை சுட்டுக் கொன்றது ஒரு முஸ்லிமே என்று இந்தக் கூட்டம் தகவல் கொடுத்தது. வானொலியில் இப்படி ஒரு செய்தி வந்துவிட்டால், நாடெங்கும் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரம் வெடிக்கும் என்பது இவர்களின் அற்ப ஆசை! ஆனால், வானொலி இந்தச் செய்தியை ஒலி பரப்பவில்லை. காந்தியாரை சுட்டுக் கொன்றது யார் என்பது தெரிந்த பிறகே, அந்த செய்தி ஒலி பரப்ப வேண்டும் என்று வானொலி நிலைய அதிகாரிகள், செய்தியை தாமதப்படுத்தினர். காந்தியார் மறைவுக்குப் பிறகும், வானொலியில் தொடர்ந்து வழக்கமான நிகழ்ச்சிகளே ஒலிபரப்பப்பட்டு வந்தன. பிர்லா மாளிகைக்குத் தொடர்பு கொண்டு செய்தியை உறுதிபடுத்திய பிறகுதான் வானொலி காந்தியாரின் மறைவை நாட்டுக்கு அறிவித்தது. காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டது மாலை 5 மணி 12 நிமிடம்; வானொலியில் அந்தச் செய்தி ஒலிபரப்பானதோ, மாலை 6 மணிக்குத்தான்! அதுவும் செய்தி எப்படி ஒலிபரப்பப்பட்டது தெரியுமா? “காந்தியாரை இன்று மாலை 5.20 மணிக்கு ஒரு இந்து சுட்டுக் கொன்றான்” என்று, சுட்டவன் இந்து என்பதை வலியுறுத்தி செய்தி அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் யார்? ஆர்.எஸ்.எஸ். என்ற சதிகாரப் பார்ப்பனர் கூட்டம் தான்!

காந்தியாரின் உதவியாளராக இருந்து, காந்தியார் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதிய பியாரிலால் தமது நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

> “காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, சர்தார் பட்டேலுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தை ஒரு இளைஞர் எழுதியிருந்தார். ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எஸ்.சில் ஈர்க்கப்பட்டு, பிறகு அதிலிருந்து வெறுப்படைந்து வெளியேறியவர் அந்த இளைஞர். ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்கு காந்தியார் சுட்டுக் கொல்லப்பட இருக்கிறார் என்ற செய்தி ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது; அந்த இனிப்பான செய்தியைக் கேட்பதற்கு வானொலி முன் தயாராக இருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் வானொலி பெட்டிகள் முன் உட்கார்ந்து கொண்டு, அந்த இனிப்பான செய்திக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். செய்தி வந்தவுடன் டில்லி உட்பட பல இடங்களில் இனிப்பு வழங்கினர்” என்று எழுதியிருக்கிறார்.

(ஆதாரம்: காந்தி உதவியாளர் பியாரிலால் எழுதிய “Mahathma Gandhi - The Last Phase” நூல் பக். 756)

அதே நூலில்-அதே பக்கத்தில் இன்னொரு தகவலும் தரப்பட்டிருக்கிறது.

> “பிறகு ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்ட போது இந்திய மாநிலங்களின் தலைநகர் ஒன்றில் இருந்த தலைமை போலீஸ் அதிகாரி, உடனே ஆர்.எஸ்.எஸ். நிர்வாகி களுக்குத் தகவல் கொடுத்து, 13 நாள்கள் துயரம் தெரிவிப்பதாகக் கூறி அலுவலகங்களை மூடிவிட்டு, தலைமறைவாகி விடுங்கள்; தடை உத்தரவை மீற வேண்டாம் என்று தெரிவித்தார்”

- என்று அந்த நூலில் குறிப்பிடப்பட்டு இருந்தது!

போலீஸ் அதிகாரியாக இருந்த பார்ப்பனர் ஒருவர் தமது இனத்துக்கு செய்திருக்கிற சேவை. காந்தியார் மறைவுக்கு 13 நாள்கள் துக்கம் அறிவித்ததில்கூட இவர்களின் தற்காப்பும் சுயநலமும் அடங்கியிருந்தது.

### கோட்சே–ஆர்.எஸ்.எஸ். நெருக்கமான தொடர்புகள்

காந்தியார் கொலைக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் தொடர்பு உண்டு என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்கள் உண்டு!

மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதையை, ‘Story of my life’ என்ற பெயரில் எழுதியிருக்கிறார். அதில் 248 ஆவது பக்கத்தில்,

“காந்தியாரை சுட்டுக் கொன்றது நாதுராம் கோட்சே என்பவன் புனேயில், ஆர்.எஸ்.எஸ். ஊழியனாகப் பணியாற்றியவன்” என்று எழுதியிருக்கிறார்.

ஏ.ஜே. குர்ரான் எழுதிய ‘Millitant Hinduism in Indian politics’ என்ற நூலில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஹெட்கேவருடன், சுற்றுப் பயணங்களில் உடன் சென்று கொண்டிருந்தவன் கோட்சே என்பதை எடுத்துக் காட்டி யிருக்கிறார்.

நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே, காந்தியாரைக் கொலை செய்யப் புறப்பட்டபோது நடந்த நிகழ்ச்சிகளை தனது வாக்கு மூலத்தில் விவரிக்கிறார். காந்தியாரை சுட்டுக்கொல்ல சென்றபோது, கோட்சே பாடிய பிரார்த்தனைப் பாடலை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அது ஆர்.எஸ்.எஸ். ‘ஷாகா’க்களில் பாடப்படும் சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடல். கோட்சே ஒரு காலத்தில் ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்துவிட்டு, பிறகு அதிலிருந்து விலகிப் போய்விட்டார் என்ற ஒரு வாதத்தை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் முன் வைத்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அது உண்மைக்கு சம்பந்தமில்லாத வாதம் என்பதை கோபால் கோட்சேயின் இந்த ஒப்புதல் வாக்கு மூலமே காட்டிக் கொடுத்து விடுகிறது.

கோட்சே பாடிய அந்த பிரார்த்தனைப் பாடல் - அவர் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராக இருந்த அந்தக் காலத்தில் ஆர்.எஸ்.எஸ். ‘ஷாகா’க்களில் பாடப்பட்ட பாடல் அல்ல; அப்போது மராத்திய மொழியில்தான் அவர்கள் பாடினார்கள். அதற்குப் பிறகு 1940 ஆம் ஆண்டில்தான் கோட்சே உச்சரித்த அந்த சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடல் நடைமுறைக்கு வந்தது.

இந்தப் பாடல் ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு மட்டுமே தெரியும். அவர்கள் இரகசியமாக அதை வைத்திருக்கிறார்கள்.

1932 ஆம் ஆண்டிலேயே நாதுராம் கோட்சே - ஆர்.எஸ்.எஸ்.சை விட்டுப் போய்விட்டார் என்றால், 1940ஆம் ஆண்டுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடம் மட்டுமே இரகசியமாக வைக்கப்பட்டிருந்த ஒரு சமஸ்கிருதப் பிரார்த்தனைப் பாடலை - காந்தியாரைக் கொலை செய்வதற்கு முன்பே கோட்சே எப்படிப் பாடினான்?

இதிலிருந்து என்ன தெரிகிறது? கோட்சேவுக்கு கடைசி வரை ஆர்.எஸ்.எஸ். தொடர்பு இருக்கிறது என்பது தானே? இதை ஆர்.எஸ்.எஸ். காரர்களால் மறுக்க முடியுமா?

நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே தந்த வாக்குமூலம் ‘May it please your honour’ என்ற தலைப்பில் நூலாக வெளி வந்திருக்கிறது. அந்த நூலின் 46ஆவது பக்கத்தில் நாதுராம கோட்சே பாடிய பிரார்த்தனை பாடல் தரப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**
**‘PURATCHI PERIYAR MUZHAKAM’**

கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை,
‘கரண்ட்’ அக்கவுண்ட்
(Karur Vysya Bank, Adyar Branch,
Current Account)

எண் : 1257115000002041
IFSC : KVBL0001257

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

மேற்கண்ட கணக்கில் கட்டமைப்பு நிதியை செலுத்தலாம்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மத்தியில் எந்த ஆட்சி வந்தாலும் மாநில சுயாட்சி – தென்மாநில கூட்டமைப்புக்கான குரலே முதன்மை பெற வேண்டும்

*5 ஆண்டு மோடி ஆட்சி வட மாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மையாக்கியுள்ளது. அடுத்து ஆட்சியை பா.ஜ.க. அமைத்தாலும் மாநிலக் கட்சிகள் காங்கிரஸ் ஆதரவோடு அமைத்தாலும் "மாநில சுயாட்சி மற்றும் தென் மாநிலங்களுக்கான கூட்டமைப்பு" என்ற முழக்கத்தை முன்னெடுத்தாக வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. தென் மாநிலங்களின் இந்த கோரிக்கையில் நியாயம் இருக்கிறது.*

2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் 15ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் அமையும் என்பதை சமீபத்தில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் திட்டவட்டமாகப் பதிவு செய்தார் அதன் தலைவரான மாநிலங்களவை உறுப்பினர் திரு. என்.கே.சிங். 2017ஆம் ஆண்டின் இறுதியில் ஒன்றிய அரசால் 15ஆவது நிதிக்குழு அமைக்கப்பட்டு, அரசாணையில் அதன் பணி வரன் முறைகள் (Terms of Reference) வழங்கப்பட்ட உடனேயே அது தென் மாநிலங்களில் மிகப்பெரிய சர்ச்சையையும், விவாதத்தையும் ஏற்படுத்தியது. அதற்கு முக்கியக் காரணம், 2020-21 முதல் 2024-25 வரையிலான நிதியாண்டுகளில் ஒன்றியப் பகுப்பு நிதியிலிருந்து (central divisible pool) மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட இருக்கும் வரித் தொகையின் அளவைத் தீர்மானிக்கும் சூத்திரம், 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் வடிவமைக்கப்படும் எனும் வரன்முறையே ஆகும்.

இதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் வண்ணம், தென்மாநிலங்களின் நிதி அமைச்சர்களின் கூட்டம் சென்ற ஆண்டு மே மாதம் திருவனந்தபுரத்தில் நடந்தது (தமிழகம் வருவதாகக் கூறி, பின்னர் பின்வாங்கியது தனிக்கதை). இத்தகைய எதிர்வினைக்கு என்னதான் காரணம்? மாநிலங்களின் சார்பாக ஒன்றிய அரசு வசூலிக்கும் வரித்தொகையை அவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதிலும், மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை முடிவு செய்வதிலும் 2026ஆம் ஆண்டு வரை, 1971ஆம் ஆண்டின் மக்கள்தொகைதான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று எழுபதுகளிலேயே மாநிலங்களுக்கு உறுதி அளிக்கப்பட்டது.

எழுபதுகளின் பிற்பாதியில் இருந்தே தென்மாநிலங்கள் மட்டுமல்லாது, மேற்கு வங்காளம், ஒடிசா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களும் தங்களுடைய மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, அதில் பெரும் வெற்றியையும் பெற்றுள்ளன. ஆனால், சமூக - பொருளாதார ரீதியாக பின்தங்கி இருக்கும் வட மாநிலங்கள், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் தென்மாநிலங்களை விட மிகவும் பின் தங்கியுள்ளன.

இத்தகைய நிலையில், 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படிதான் நிதி பகிர்ந்தளிக்கப்படும் என்ற முடிவு, மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியிருக்கும் தென்மாநிலங்களை வஞ்சித்து, அதிக மக்கள் தொகையைக் கொண்ட வடமாநிலங்களுக்கு கூடுதல் நிதியை மடைமாற்றம் செய்யும் ஏற்பாடாகப் பார்க்கப்படுகிறது. 2011ஆம் ஆண்டுக்கான மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நிதிப்பகிர்வை மேற்கொள்வது தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு பலவகைகளில் அநீதி இழைப்பதாகும்.

இந்தச் சர்ச்சையின் விவாதப் பொருளை நாம் நுணுக்கமாக, ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், இந்தியாவின் மாநிலங்கள் இடையே ஏற்பட்டுள்ள சமமற்ற மக்கள்தொகை வளர்ச்சி, புலம்பெயர்வின் போக்கு ஆகியவற்றை அறிந்துகொள்வது அவசியம்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர வேண்டும் என்றால், அந்நாட்டின் மக்கள் தொகையில் உழைக்கும் வயதில் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். இந்த நிலையில்தான் இந்தியா இருக்கிறது. 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் 25 வயதிற்கும் குறைவானவர்கள் 35 விழுக்காடு இருப்பார்கள் என்று கணிக்கப்படுகிறது. இந்தியாவில் உழைக்கும் வயது மக்கள்தொகை உழைக்கும் வயதில் இருப்பவர்களைச் சார்ந்திருக்கும் மக்கள் தொகை ஆகியவற்றின் விகிதம் (working age to non-working age population ratio) 1.7 தென் கொரியா, மக்கள் சீனம் போன்ற நாடுகளின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்தபோது இந்த விகிதம் 2.5 முதல் 3 வரை இருந்த போதிலும், அது பல பத்தாண்டுகளுக்கு நீடிக்கவில்லை; அது வேகமாக வளர்ந்து வேகமாகவே வீழ்ந்தும் விட்டது. ஆனால், இந்த விகிதம் ஒப்பீட்டளவில் இந்தியாவில் குறைவு என்றாலும், 2050 வரை நீடிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

தேசிய அளவில் இந்த நிலை இருந்தாலும், இந்தியாவின் மாநிலங்களுக்கிடையே மக்கள்தொகை வளர்ச்சியில் உள்ள பெரும் வேறுபாட்டையும், சமமற்ற தன்மையையும் புரிந்துகொண்டால்தான் உண்மை நிலவரம் என்னவென்று புலப்படும். பொருளாதார வளர்ச்சி, உழைக்கும் வயது மக்கள் தொகை வளர்ச்சியைப் பொறுத்தவரை மேற்கூறிய ஆசிய நாடுகளின் பாதையில்தான் இந்தியாவின் தென்மாநிலங்கள் பயணிக்கின்றன. இங்கு குழந்தை பெற்றுக் கொள்ளும் வயதில் (15 வயது - 44 வயது) இருக்கும் பெண்களின் கருவுறுதல் விகிதம் (Fertility rate) 2.1க்கும் குறைவாக உள்ளது. இந்த விகிதம் 2.1 என்று இருந்தால்தான் ஒரு மாநிலத்தின் மக்கள்தொகை நிலையாக இருக்கும். தென்மாநிலங்களில் இது 2.1 க்கும் குறைவாக இருப்பதால், வரும் காலங்களில் மக்கள் தொகை குறைவது மட்டுமின்றி, உழைக்கும் வயதில் இருக்கும் மக்களின் எண்ணிக்கையும் குறையும்.

இதற்கு முற்றிலும் மாறாக, உத்தரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான் போன்ற வடமாநிலங்களில் பெண்களின் கருவுறுதல் விகிதம் 2.5 முதல் 3.5 வரை இருப்பதால், அம்மாநிலங்களின் மக்கள் தொகை தொடர்ந்து வளர்வது மட்டுமின்றி, உழைக்கும் வயதில் இருக்கும் மக்கள் தொகையின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். ஆக, முதுமை அடைந்து வரும் தென்மாநில மக்களின் ஆரோக்கியம் சார்ந்த தேவைகளை கவனித்துக்கொள்வதும், இளமையான வடமாநில மக்களின் கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு சார்ந்த தேவைகளை கவனித்துக்கொள்வதும் அந்தந்த மாநில அரசுகளின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பது புரிகிறது.

### வடமாநில மக்களின் புலம்பெயர்வு

ஆனால் கள ஆய்வுகள், புள்ளி விவரங்கள், பத்திரிகை செய்திகள், நம்முடைய அன்றாட அனுபவங்கள் ஆகியவை, வட மாநில அரசுகள் தங்களுடைய மக்களின் நலனை உறுதி செய்வதில் போதிய அக்கறை காட்ட வில்லை என்பதைத் தெரிவிக்கின்றன. இதற்குச் சிறந்த குறியீடு, வடமாநிலங் களிலிருந்து தென்மாநிலங்களுக்கு வந்து வேலை செய்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதே ஆகும். மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011, 2016-17ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை புலம் பெயர்வு பற்றித் தரும் தகவல்களைப் பார்ப்போம்.

2001-2011 காலத்தில், புலம்பெயரும் உழைப்பாளி மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் சராசரியாக 4.5 விழுக்காடு வளர்ந்திருக்கிறது. இது 1991-2001 காலத்தில் கண்ட வளர்ச்சி 2.4 விழுக்காடு மட்டுமே. இந்தியாவின் மொத்த உழைப்புப் படையில் புலம்பெயர்ந்தவர்களின் பங்கு 2011இல் 10.5 விழுக்காடு; இது 1991 மற்றும் 2001 ஆண்டுகளுக்கான மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி வெறும் 8.1 விழுக்காடாக இருந்தது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், 2000க்குப் பின், வேலை சார்ந்த புலம்பெயர்வு ஆண்டுக்கு 5 கோடி முதல் 9 கோடி வரை இருந்துவந்துள்ளது. பொதுவாகவே, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியிருக்கும் பகுதிகளிலிருந்து, வளர்ந்த அல்லது வளரும் பகுதிகளுக்கு மக்கள் புலம்பெயர்வார்கள். இந்தியாவில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் புலம்பெயர்வும் இந்த போக்கையே கடைபிடித்துவருவதாகத் தெரிகிறது.

புலம் பெயர்பவர்கள் அதிக அளவில் உத்தரப் பிரதேசம், பிகார், ஒடிசா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வருபவர்கள் என்றும், அவர்கள் நோக்கிச் செல்லும் மாநிலங்களில் முதன்மை இடங்களில் டெல்லி, மகாராஷ்டிரா, தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகியவை இருப்பதாகத் தெரிய வருகிறது. வட மாநிலங்களிலிருந்து தென்மாநிலங்களுக்கு வேலை தேடிப் புலம்பெயர்பவர்கள் எண்ணிக்கை சமீப காலங்களில் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக, இந்த மாநிலங்களின் மக்கள் தொகையில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எண்ணிக்கையை பதிலியாக வைத்துக் கொண்டு பார்ப்போம்.

தென்மாநிலங்களில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் எண்ணிக்கை 1991-2011:

| மாநிலம் | 1991 | 2001 | 2011 |
|---|---|---|---|
| கர்நாடகம் | 2.7 லட்சம் | 13.4 லட்சம் | 20.1 லட்சம் |
| தமிழ்நாடு | 1.3 லட்சம் | 1.9 லட்சம் | 3.9 லட்சம் |
| ஆந்திரப் பிரதேசம் | 3.7 லட்சம் | 24.6 லட்சம் | 31.2 லட்சம் |
| கேரளம் | 14 ஆயிரம் | 26 ஆயிரம் | 52 ஆயிரம் |

ஆதாரம்: 1991, 2001, 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு

### மாநிலங்களுக்கு இடையே நிதிப் பகிர்வுச் சிக்கல்கள்

ஒரு மாநிலத்திற்குள் புலம்பெயர்வு என்பது தொழில்மயமாதல், நகரமயமாதலின் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பிரதிபலிப்பு என்றாகும்போது, அந்த மாநிலத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், அரசின் மீது சுமை அதிகமாகிறது. மேலும், இது திட்டமிடாத வகையில் நடக்கும்போது, புலம்பெயர்ந்து வந்தவர்கள் உட்பட அனைவருக்கும் அடிப்படை வசதிகளை உறுதிசெய்து, நிலைத்தகு முறையில் இந்த வளர்ச்சியைக் கொண்டு செல்லுதல் பெரும் சவாலாகிறது. புலம்பெயர்ந்து வந்தவர்களுக்கு உணவுப் பாதுகாப்பு, தங்க அடிப்படை வசதிகள் கொண்ட இடம், சுகாதார வசதி, சமூகப் பாதுகாப்புத் தொகை, அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி போன்றவற்றை உறுதி செய்தல் என ஏராளமான சவால்கள் நம்முன் உள்ளன.

ஆக, வளர்ந்த மாநிலங்களுக்கும் பல புதிய சவால்கள் இருப்பதால், அவற்றை சமாளிக்கக் கூடுதல் நிதி ஆதாரங்களும் வேண்டும். இதன் பின்னணியில்தான் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, புலம்பெயர்வினால் உண்டாகும் அழுத்தங்களைச் சந்திக்கும் தென் மாநிலங்களுக்கும் நிதிப்பகிர்வில் நியாயம் வழங்குவதற்கான வாதம் முன்வைக்கப்படுகிறது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தக் கோரியும் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இந்திய அரசு எள்முனையளவும் மதிக்கவில்லை. இதில் தமிழ்நாட்டு மக்களின் இறையாண்மையைக் காலில் போட்டு மிதித்து வருகிறது இந்திய அரசு. ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் தமிழ்நாட்டு மக்களின் எழுச்சியின்றி அது சாத்தியமில்லை. அத்தகைய எழுச்சிதான் பதவி அரசியல் கட்சிகளை நீதிக்கான நிலையெடுப்பில் நேர்க்கோட்டில் கொண்டு வரும். போராட்ட நெருப்பு மட்டுமே இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியும் என்பதைக் கடந்தகால பட்டறிவும் சமகால கையறு நிலையும் நமக்கு காட்டி நிற்கிறது.

இப்போது கனடா, ஜெர்மனி, மாசிடோனியா, மாண்டிநீக்ரோ, பிரித்தானியா ஆகிய நாடுகளடங்கிய சிறிலங்கா தொடர்பான முதன்மைக் குழு சிறிலங்காவுக்கு மீண்டுமொருமுறை கால நீட்டிப்பு வழங்க வேண்டும் என்று பிப்ரவரி 13ஆம் நாள் நிலையெடுத்து அறிவித்துள்ளது. மார்ச் 1 அன்று மேலும் ஈராண்டு காலம் நீட்டிப்புக் கொடுக்கும் பிரித்தானியாவின் தீர்மான வரைவு வெளிவந்துள்ளது. ஐ.நா. மனித உரிமை மன்ற ஆணையர் அலுவலகத்தின் அறிக்கையும் கால அவகாசம் தருவதற்கு பரிந்துரைத்துள்ளது. இத்தகைய கால நீட்டிப்பை உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஏற்கவில்லை.

## தலைமைக் கழக நிதி



பேராவூரணி-சேதுபாவாசத்திரம் ஒன்றிய திவிக சார்பில் கழக கட்டமைப்புநிதி ரூ20000 கழகத் தலைவரிடம் தஞ்சைமாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம், அறிவுச்செல்வன் பெரியசாமி, அரும்புச்செல்வன் பெரியசாமி ஆகியோர் வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 24th May 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN